# நிதி உதவி இன்றி இயங்கும் 'உமன்' சமூக சேவை நிறுவனம்

அடுப்பூதும் பெண்களுக்கு எதற்கு படிப்பு என்ற நிலைமாறி தற்போது பெண்கள் கம்ப்யூட்டர் இண்டர்நெட் வரை சென்றாலும் தமிழகத்தில் உள்ள சில கிராமபுற பகுதியில் உள்ள பெண்கள் இன்றைய சமுதாயத்தை பற்றிய விழிப்புணர்வை பெறாத நிலையில் தான் உள்ளார்கள் எனலாம்.

இந்நிலையில் இன்று பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடங்கப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு கருத்துக்களை அறிவுறுத்தி வந்தாலும் அரசின் எவ்வித நிதியுதவியின்றியும் எந்த ஒரு நபரிடமும் நன்கொடை எதுவும் பெறாமல் புதுக்கோட்டை அருகே உள்ள கீரனூரில் செயல்பட்டு வரும் உமன் (பெண்கள்) சமூக சேவை மையம் (ஆரம்பத்தில் சரணாலய என்ற பெயரில் இயங்கி வந்தது) 1992-ல் அரசின் முறைப் படியான பதிவு பெற்று இயங்கி வரும் இம்மையத்தின் முக்கிய நோக்கமோ கிராமத்தில் உள்ள பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே குறிப்பாக பெண்களுக்கு குடும்பத்தில் ஏற்படுகின்ற பொருளாதார பிரச்சினை கணவன் மனைவி பிரச்சினைகள், வரதட்சணை மற்றும் பிற பிரச்சினைகளில் இருந்து பெண்கள் சமாளித்து கொண்டு வாழ்வது எப்படி? என்பது பற்றிய விழிப் புணர்வு கருத்துக்களை கிராமங்கள் தோறும் ஏற்படுத்த வேண்டும். என்ற அடிப்படையில் இந்த மையம் செயல்பட்டு



கண்ணகி சந்திரசேகரன்

முறைகள் ஏற்படுத்தி தருகிறோம்.

பெரும்பாலான குடும்பத்தில் கணவர் குடித்துவிட்டு வந்து மனைவியை துன்புறுத்தி வருவார்கள். அவர்களை எப்படி திருத்துவது தினமும் குடித்தால்

பெண்கள் சமூகசேவை மையம். ஒரு தனியார் வங்கியில் வேலை பார்த்து வரும் கண்ணகி சந்திரசேகரன் என்பவரால் தொடங்கப்பட்டது ஆகும்.

தற்போது தன் குடும்பம் வேலை, குழந்தைகள் தனது வீட்டு பீரோ நிறைந்தால் போதும் என்ற எண்ணம் கொண்டு விளங்கும் சராசரி பெண்களை போல் இல்லாமல் இந்த உலகத்தின் பிறந்த தன் பயனாக முடிந்த அளவு பிறருக்கு ஏதாவது உதவிகள் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தொடங்கப்பட்டு தன் வருமானத்தில் ஒரு பகுதியை இம்மையத்திற்காக செலவு செய்து வருகிறாராம் கண்ணகி சந்திர சேகரன்.

இச் சமூக சேவை மையத்தின் வருகிறது.

தற்போது புதுக்கோட்டை கீரனூர் பகுதிகளை சுற்றியுள்ள சுமார் 77 கிராமங்களில் இவ்வமைப்பு மூலம் மகளிர் அமைப்புகள் ஏற்படுத்த பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத் திலும் 10 பேர் கொண்ட பெண்கள் அதற்கு மேற்பட்டவர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட நாட்களில் அந்தந்த கிராமங்களில் முகாம்கள் நடத்தி விழிப்புணர்வு கருத்துக் களை ஏற்படுத்தி வருகிறோம். பொது வாக ஒரு குடும்பத்தில் பிரச்சினை ஏற்படுகிறது என்றால் அது முதலில் பொருளாதார பிரச்சினையாகத்தான் இருக்க முடியும் அவற்றை பெண்கள் சமாளிப்பதற்கு அவர்கள் சொந்த

எதிர் காலத்தில் குடும்பத்தில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது பற்றி எல்லாம் சில கிராமங்களில் இவ்வமைப்பின் மூலம் நாடகங்கள், மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி அதன் மூலம் சில விழிப்புணர்வு கருத்துக்களை ஏற்படுத்தவும் ஒரு கிராமத்தில் ஏற்படும். அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் அங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி களையும் நடத்தி வருகிறோம்.

இதனால் சில கிராமங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சில பெண்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினையை சரி செய்ய இந்த அமைப்பை தேடி வருகிறார்கள். இவ்வமைப்பை புரிந்து கொண்ட பெண்கள் பலர்